MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Semantic Study on Lexicon and Semantic Fields in Tholkappiyam Traditions

Dr. A. Natarajan

Assistant Professor, Department of Tamil, Bharathiar University Post Graduate Extension & Research Centre, Perundurai, India

Manuscript ID : **MT497A0158**

Volume : **4**

Issue : **1**

Month : **March**

Year : **2024**

Received: 06.02.2024
Revised: 17.02.2024
Accepted: 08.03.2024
Published: 15.03.2024

Pages : 01-14

DOI: 10.5281/zenodo.10911207

ABSTRACT:

Researches on Tolkappiyam occupy a unique place in the world of Tamil studies. When comparing and integrating the concepts of Tolkappiyam divided into three chapters with other fields such as linguistics, anthropology, folklore, history, psychology, etc., it can be seen that the meaning is based on the description of those fields. Linguists say that the research that explains the semantic field and the objects participating in it, the gaps found in the semantic field, the types of semantic field, etc. In the same way, the concepts in the traditions incorporated in the semantic chapter of Tolkappiyam are explained by linguists like Saussure, Ullmann, Borsik, Vassiliev, Naida, etc. Synonym, antonym, subtext, context, although the meaning is arranged in terms of semantics, it can be known that many sections of meaning are explained in the semantic fields and the lexical analysis. Especially the tender names, masculine names, and feminine names defined in Tolkappiyam are divided into lexical and semantic fields, and the words are generally located. This study also tries to explain that it is separated and interpreted as a vocabulary and a conceptual field. Thus the studies on semantic field and lexicon have helped to reveal the richness of language and the richness of semantics governed by words.

KEYWORDS:

Tolkappiyam, Genetics, Semantic field, Vocabulary, Semantics, Linguistics

தொல்காப்பிய மரபியியலில் சொற்தொகுதியும் பொருண்மைக்களமும் - பொருண்மையியல் ஆய்வு

முனைவர் அ. நடராஜன்
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம் முதுகலை பட்ட மேற்படிப்பு விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சி மையம், பெருந்துறை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தமிழ் ஆய்வு உலகில் தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகள் தனித்துவமான இடம் பெறுகின்றன. மூன்று அதிகாரங்களாக பகுக்கப்பட்டுள்ள தொல்காப்பியக் கருத்துகளைப் மொழியியல், மானுடவியல், நாட்டுப்புறவியல், வரலாறு, உளவியல், போன்ற பிறத்துறைகளோடு ஒப்பிட்டும், உட்புகுத்தியும் ஆய்வு மேற்கொள்ளும் போது அத்துறைகளின் விளக்கத்திற்கு ஏற்ப பொருண்மை அமைந்திருப்பதைக் காணலாம். பொருண்மைக்களத்தையும் அதில் பங்கு பெறும் பொருட்களையும், பொருண்மைக்களத்தில் காணப்படும் இடைவெளிகள், பொருண்மை வகைகள் போன்றவற்றையும் விளக்குகின்ற ஆராய்ச்சியே பொருண்மைக்கள ஆய்வு என்கின்றனர் மொழியியலாளர்கள். அவ்வாறே தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மரபியலில் இடம் பெற்றுள்ள கருத்துகளை மொழியியலின் ஒரு பிரிவான பொருண்மையியலில் சசூர், உல்மன், போர்சிக், வாசில்யேவ், நைடா போன்ற மொழியியலாளர்கள் விளக்கியுள்ள பொருண்மைக்களம், சொற்தொகுதி ஆய்வில் உட்படுத்தும்போது மரபியலின் முதல் நூற்பா முதல் இறுதி நூற்பா வரையில் விளக்கியுள்ள கருத்துகள் பொருண்மையியலின் உட்பிரிவுகளான ஒருபொருட் பன்மொழி, பல்பொருண்மை, எதிர்ச்சொல், பொருள் உட்கோடல், பொருண்மைக்களம், சொற்தொகுதி போன்ற நிலைகளில் பொருள் விளக்கம் தரும் வகையில் அமைந்திருப்பினும், பொருண்மைக்களத்திலும் சொற்தொகுதி பகுப்பிலும் பல தனித்தப் பொருண்மைக்களத்தை விளக்கி நிற்பதையும் அறியமுடிகிறது. குறிப்பாக தொல்காப்பிய மரபியலில் வரையறுக்கப்பட்டுள்ள இளமைப் பெயர்கள், ஆண்பால் பெயர்கள், பெண்பால் பெயர்களைச் சொற்தொகுதியாகவும், பொருண்மைக்களமாகவும் பகுத்து காணும்கால் அச்சொற்கள் பொதுவாக அமைந்து நிற்பதுடன், தனித்தனியேப் பிரிந்து சொற்தொகுதியாகவும், பொருண்மைக்களமாகவும் விளக்கும் வகையில் அமைந்திருப்பதையும் இவ்வாய்வு விளக்க முற்படுகிறது. இவ்வாறு பொருண்மைக்களம் மற்றும் சொற்தொகுதி பற்றிய ஆய்வுகள் மொழி வளத்தையும்,

சொற்களால் ஆளப்பட்டுள்ள பொருண்மை வளத்தையும் வெளிக்கொணர்வதற்கு ஏதுவாகிது.

கருச்சொற்கள்

தொல்காப்பியம், மரபியல், பொருண்மைக்களம், சொற்தொகுதி, பொருண்மையியல், மொழியியல்

முன்னுரை

தமிழ் ஆய்வு உலகில் தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகள் தனித்துவமான இடம் பெறுகின்றன.

> **“பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மக்கள் தம் வாழ்வை முற்றிலும் அறிந்து உணர்ந்து அப்போது காணப்பட்ட சமூகத்தையும், சமூகத்தார் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளையும், அச்சமூகத்தை பற்றி பதிவு செய்யும் பொறுப்புடைய இலக்கியங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதையும் இலக்கணமாய்த் தந்து சென்றது தொல்காப்பியம்.” (சுதா.மு, பக். 46)**

> **“ஆதியாக விளங்கி ஆதாரங்களையும் ஆவணங்களையும் தாங்கிக் கொண்டு முப்பெரும் அதிகாரங்களாக சுமந்து இன்றைய வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்கக் கூடியது தொல்காப்பியம்” (பிரபா. இரா, பக்.363)**

இவ்வாறு சிறப்பு பெற்ற தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களில் தனித்தும், சேர்த்தும், தனித்தனி இயல்களாகவும் ஆய்வுகள் பல நிகழ்ந்துள்ளன. இவ்வகையான ஆய்வுகள் தொல்காப்பியத்தினுள் அமைக்கப்பட்டுள்ள உட்கூறுகளை நுணுக்கமாகவும், அணுக்கமாகவும் எடுத்தியம்புவதாக காணக்கிடைக்கின்றன. அவ்வகையில் தொல்காப்பியம் விளக்கும் கருத்துக்களை எழுத்து, சொல், பொருள் பற்றிய கோட்பாடுகளைக் கொண்டு இலக்கியங்களில் பொருத்தி விளக்கிய ஆய்வுகளும், பிறத்துறைகளோடு தொல்காப்பிய கருத்துக்களை ஒப்பிட்டு விளக்கிய ஆய்வுகளும் பல வெளிவந்துள்ளன. அதன் ஒரு பகுதியாக தொல்காப்பிய பொருளதிகாரத்தின் இயலாக அமைக்கப்பட்டுள்ள மரபியலின் உட்பொருண்மைகளை மொழியியலின் ஒரு கூறான பொருண்மையியலின் பொருண்மைக்களம் மற்றும் சொற்தொகுதி ஆய்விற்கு உட்படுத்தி விளக்குவதாக இவ்வாய்வு அமைகிறது.

மொழியியலும் பொருண்மையியலும்

மொழி ஆணிவேராக நின்று மானுட சமுதாயத்தினை இயக்கும் கருவி.

> **"ஒருவிடமிருந்து ஒருவர் எனத் தொடர்ந்து வழி வழியாக கடைப்பிடிக்கப் பெறும் பேச்சொலிகளையும், குறியீடுகளையும், எழுத்துகளையும் முறையோடு பயன்படுத்தி ஒருகுறிப்பிட்ட மொழிச் சமுதாயத்திற்குள்ளாக கருத்துப் பரிமாற்றமோ அல்லது கருத்துப் புலப்பாடோ செய்ய துணை நிற்கும் கருவி ஆகும்" (நடராசன் ஆ.கோ, பக்.1)**

மனிதனை மனிதனாக இனங்காட்டுவது மொழி என்கிறனர் மொழியியல் அறிஞர்கள். மொழி என்று தோன்றியதோ அன்று முதலே மொழியைப் பற்றிய ஆராய்ச்சி தொடங்கியது எனலாம். மரபிலக்கணங்கள் வகுத்துரைத்த மொழியின் இலக்கணத்தை முறையாக அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து விளக்கும் துறை மொழியியல். பொருண்மையியல் இந்தப் பதமானது பொருளை விரிவாகக் குறிக்கிறது. பொருண்மையியல் மொழியியலின் ஒரு பெரும் பிரிவாகும். மொழியியல் நோக்கில் பொருள் தெரிவிக்கப்படும் விதமானது பல்வேறு பிரிவுகளையும், கட்டமைப்புகளையும் கொண்டது. மொழியமைப்பானவை ஒலியியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல், உருபொலியனியல், உருபதொடரனியல் உருப பொருண்மையியல் எனப்பகுத்து ஆராய்கிறது. இவற்றில் பொருண்மையியல் மொழியின் அமைப்பு மற்றும் செயல்பாட்டுடன், உளவியல், தத்துவவியல், தர்க்கவியல், மானுடவியல் மற்றும் பொருள் வழியியல் பரிமாணங்களை உள்ளடக்கியது.

> **"பொருண்மையியல் எனப்படுவது மொழி வெளிப்பாடுகளான பொருண்மையை வெளிப்படுத்துதல், பொருண்மைக்கும் மொழி வெளிபாடுகளுக்கும் இடையிலான உறவு ஆகியவை குறித்துக் கற்பதும் தெளிவாக விவரிப்பதும் ஆகும்" (செ.சண்முகம், பக்.6)**

என்பது பொருண்மையியல் பற்றிய மொழியலாளர்கள் கருத்து. பொருண்மையியலின் உட்கூறுகளில் ஒன்று பொருண்மைக்களம்.

> **"பொருட்களத்தையும் அதில் பங்குபெறும் பொருள்களையும், பொருட்களத்தில் காணப்படும் இடைவெளிகள், பொருட்கள் வகைகள் போன்றவற்றையும் விளக்குகின்ற ஆராய்ச்சியைப் பொருண்மைக்கள ஆய்வு எனலாம்". (செ.சண்முகம், பக்.6).**

பொருள் நிலையிலும், அமைப்பு நிலையிலும் தொடர்புடைய பல சொற்கள் ஒன்றோடு ஒன்று உறவு கொண்ட சொல்வலைகளை உருவாக்குகின்றன. அச்சொல் வலைகள் சுட்டுகின்ற அனைத்தும் இணைந்து உருவாவது பொருட்களம் எனப்படும். உலகைக் குறித்த அறிவையும், எண்ணக் கூறுகளையும் பல பரிவுகளாகப் பகுத்துக், கருத்துக் கூறுகளாக மாற்றி அவைகளின் எல்லைகளை வரையறை செய்யும்போது பொருண்மைக் கூறுகள் உருவாகின்றன. அவை ஒலிகள் மற்றும் ஒலியன்களோடு இணைக்கப்படும்போது சொல்லாக்கமும் சொற்பொருளாக்கமும் ஒலியில் ஏற்படுகின்றன.

> **"பொருண்மைக்களத்தை வெளிப்படையாகக் காட்ட முடியாது. சொற்தொகுதி உதவியால் மறைமுகமாகக் காட்டலாம்" (செ.சண்முகம், பக்.105).**

பொருண்மைக்களமும் சொற்தொகுதியும்

பொருண்மைக்களங்களையும் அவைகளில் பங்கெடுக்கும் கருத்துக்களைக் குறிக்கும் சொற்களாவன சொற்தொகுதிகளையும் குறித்த ஆய்வுகள்

> **"ஒரே துறையில் அறிஞர்கள் ஒரே பொருளைப் பல்வேறு நோக்கில் பல்வேறு முறையில் அணுகுகிறார்கள். மொழியியலிலும் மொழியை எல்லோரும் ஒரே கோணத்தில் நோக்குவது இல்லை. மொழியின் தன்மையைப் பற்றிக் கொண்டிருக்கின்ற கருத்துக்கள் கூட வேறுபடுகின்றன." (அரங்கன். கி. டாக்டர், மாற்றிலக்கண மொழியியல், பக்.50)**

சசூர், பேல்லி, டிரையர், போர்சிக், வாசில்லேவ், உல்மன், லெகர் போன்ற அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர்.

> **"சொற்தொகுதியும், அவைகள் நிலைநாட்டப்பெறும் முறைகளை விளக்கும்போதும் பொருண்மைக்களம் குறிப்பாக விளக்கப்படுகிறது என அறிஞர் கருதுகின்றனர். இதனால் சொற்தொகுதிகள் குறித்த ஆய்வே பொருண்மைக்கள ஆய்வு என கருதப்படுகிறது". (செ.சண்முகம், பக்.105).**

மேற்காணும் மொழியியல் அறிஞர்கள் ஒவ்வொருவரும் சொற்பொருண்மை, சொற்களின் சூழல் பொருள், சொல் உணர்த்தும் பொருண்மை சொல்லின் பண்பு போன்றவை கொண்டு பலவாக விளக்கியுள்ளன. அவைகளைத் தொடர்நிலை சொற்தொகுதி, அடுக்குநிலை சொற்தொகுதி, கலவை சொற்தொகுதி எனப் பகுத்துக்

காணலாம். இவ்வறிஞர்களின் பொருண்மைக்களக் கோட்பாட்டில் பல பொருண்மைக்களங்களும், சொற்றொகுதிகளும் விளக்கப்பட்டிருப்பினும் ஒரு பகுப்பு மட்டுமே இவ்வாய்விற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை, சொல்லின் சூழல் பொருள், சொல்லின் இயல்பு, சொல்லின் பண்பு ஆகிய கூறுகள் இவ்வாய்வில் உட்படுத்தப்பட்டுள்ளன.

பொருளதிகார அமைப்பியல்

தமிழ் இலக்கண இலக்கிய வரலாற்றில் முதல் நூலாகக் கண்டு இன்றளவும் போற்றப்படும் நூல் தொல்காப்பியம். தமிழ்மொழிக்கெனப் பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இரு வழக்கிற்கும் இலக்கணம் கூறும் சிறப்புடன் திகழ்கிறது. முதலதிகாரமான எழுத்ததிகாரம் தமிழ் எழுத்துகளின் உருவம் மற்றும் அவ்வெழுத்துகள் சொற்களில் இடம் பெறும் தன்மையை விளக்குகிறது. சொல்லதிகாரம் சொற்களின் பாகுபாட்டுத் தன்மை, வாக்கிய அமைப்பு, வேற்றுமையின் பொருள் பாகுபாடு, வேற்றுமை மயக்கம் உள்ளிட்டவைகளை விளக்குகிறது. இவ்விரண்டு அதிகாரங்களில் இருந்து மாறுபட்டு அமைந்துள்ளவை பொருளதிகாரம். மேற்காண் அதிகாரங்கள் எடுத்துரைக்கும் தமிழ் மொழியைப் பேசும் தமிழர்களின் வாழ்வியலுடன், அம்மக்களால் படைக்கப்படும் இலக்கியங்களின் உட்பொருள் மற்றும் கட்டமைப்பை விளக்குவதாக அமையப்பெற்றுள்ளமைப் பொருளதிகாரம். தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களிலும் அவற்றின் பெயர்களுக்கேற்ப இயல்கள் அமைத்து அவ்வியலில் இடம்பெற வேண்டியச் செய்திகளையும் முறையாக வரையறுத்து அமைத்துள்ளதைக் காணலாம். எழுத்து, சொல், பொருள் இலக்கணங்களைக் கூறுவது தொல்காப்பியம். உலக மொழிகளில் எழுத்துக்கும், சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழிக்கு மட்டுமே வாழ்வியல் கருத்துக்களை மிக செறிவாக விளக்கும் பொருளதிகாரம் தொல்காப்பியரால் கிடைக்கப்பெற்றது. பொருளதிகாரத்தில் முதல் ஐந்து இயல்கள் இலக்கியப் பாடுபொருளான வாழ்வியல் செய்திகளைப் பற்றியதாக அமைக்கப்பட்டுள்ளன. மற்ற பின் நான்கு இயல்கள் தமிழ் இலக்கியம் சிறக்கத் தேவையானவற்றைக் கூறுகின்றன.

> **“பொதுவாகச் சொல்லப்போனால், தொல்காப்பியப் பொருளதிகாரம் பண்டைய தமிழ் மக்களின் சமூக வாழ்க்கையைக் கூறும் நூல் எனவும் கொள்ளலாம்” (நடராசன் ஆ.கோ, பக்.47)**

இவ்வாறு பொருளதிகாரத்தின் ஒன்பது இயல்களும் தமிழரின் வாழ்வியலை மையமிட்டே கட்டமைக்கப்பட்டுள்ளதை அதன் இயல் உள்ளடக்கங்கள் கொண்டே அறிந்து கொள்ள முடிகிறது.

"பொருளதிகார முழுமையும் நோக்கும் போது அது இலக்கியத்தின் உள்ளடக்கம், உருவகம், இலக்கிய வகை, இலக்கியத்தின் பயன், இலக்கியத்தைப் புரிந்து கொள்ளும் முறை அல்லது இலக்கியம் படைக்கத் தேவையான அறிவு யாவற்றையும் அறியும் தன்மை புலனாகிறது". (நடராசன் ஆ.கோ, பக்.47)

எழுத்துகள் பற்றி விளக்க முற்படும் போது,

"எழுத்து எனப்படுப
அகரம் முதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப
சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடையே"
(தொல்காப்பியம்.எழுத்து. நூற்.1 பக். 41)

என எழுத்ததிகாரம் முழுவதும் உயிர், மெய், சார்பு எழுத்துக்களை மையமிட்டே விளக்கிச் சொல்வதை எழுத்ததிகாரம் முழுவதும் காணலாம். அவ்வண்ணமே சொல்லதிகாரமும் முதலில் சொல்லிற்கான இலக்கணத்தில் உயர்திணை, அஃறிணை விளக்கம் முன்வைத்து பின் தொடர்களில் வருமாற்றை விளக்குவதாக அமையப்பெற்றுள்ள நூற்பா,

"செப்பும் வினாவும் வழாமல் ஓம்பல்"
(தொல்காப்பியம்.சொல். நூற் - 11. பக் - 368)

என தொடர்களில் சொற்கள் அமையும் முறையினை எடுத்தியம்ப பெயர், வினை, இடை, உரிச்சொற்கள் இலக்கணம் என விளக்கிச் சொல்கிறது. சொல்லதிகாரம் இதே கட்டமைப்பில் பொருளதிகார அமைப்பும் இடம் பெறுவதோடு பொருளதிகாரத்திற்கான தனித்துவமும் அமைக்கப்பட்டுள்ளமையால் மேலும், அதன் சிறப்பு மிளிர்ந்து காணப்படுகிறது. தமிழர்களின் வாழ்வியல் அகம், புறம் என்றும், அகத்தின் பிரிவான களவு, கற்பு வாழ்வியல் எத்தன்மையான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது, என்பவற்றோடு இவ்வாழ்வியலை எடுத்தியம்பும் இலக்கியத்தின் உட்பொருளாக இடம்பெறும் மெய்ப்பாடு, உவமை இதனைக் கொண்டு கட்டப்பெறும் அமைப்பு கூறுகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளமை தனித்துவம் என்றால், திணை, அகப்புற வாழ்க்கை, செய்யுள் இவற்றிலெல்லாம் உயர்திணையோடு, இடம்பெறும் அஃறிணை உயிர்களின் பெயர் வைப்பு முறையையும் விளக்கியுள்ளமை மேலும் தனித்துவச் சிறப்பை பெறுகின்றன. இவ்வாறு மூன்று அதிகாரங்களும், அதிகாரப் பெயர்களுக்கு ஏற்ப உட் கட்டமைப்பைப் பெற்று அமைந்துள்ளதை ஒவ்வொரு அதிகார இயல் வைப்பு முறை கொண்டும், இடம் பெற்றுள்ள பொருண்மைக் கொண்டும் அறியலாம்.

பொருளதிகார அமைப்பில் மரபியல்

தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களையும் இணைத்துக் காணினும், பொருளதிகாரத்தைத் தனித்துக் காணினும் மரபியலே தொல்காப்பியரின் தொல்காப்பிய அமைப்பில் கடைசி இயலாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வியல் தமிழர்களின் வாழ்க்கையிலும், அவர்களால் படைக்கப்படும் இலக்கியங்களிலும் ஒரு கூறாக இடம் பெறும் உயிர்களின் பாகுபாடு, உயிர்களின் இளமைப் பெயர்கள், அவற்றின் ஆண், பெண் பெயர்களின் பாகுபாட்டு அமைப்பு முறையை விளக்கியுள்ளார் தொல்காப்பியர். மேலும் நூல் வரையறை, உரை வரையறை, அவ்வுரைகளின் பாகுபாடு, என இயல் முடிவுவரை பல பகுப்பு முறைகள் உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பாகுபாடுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனித்தனி சொற்றொகுதிகளாகத் தொகுத்தோமெனில் சொற்றொகுதியின் ஊடே பல பொருண்மைக்களம் கிளைத்து மற்றுமொரு களத்தை விளக்கி நிற்பதை காணமுடிகிறது.


மரபியலில் பொருண்மைக்களமும் சொற்தொகுதியும்

மொழியின் பரிணாம வளர்ச்சியில் பிறந்தனவே இலக்கண இலக்கியங்கள். மொழியின் தோற்றத்தால் பிறந்த இலக்கண, இலக்கியத்தை அம்மொழியின் கூறுகள் கொண்டு ஆய்வு செய்யும் போது அவ்விலக்கண இலக்கியங்களில் மொழிக்கூறுகள் ஒன்றிணைந்துப் பொருண்மைக்களக் கூறுகளை விளக்கி நிற்பதை காணலாம். அவ்வாறே மரபியலின் தொடக்கமாக அமையும் இளமைப்பெயர்கள், ஆண்பால், பெண்பால் பெயர்கள் இவைகளை தனித்த பொருண்மைக் களமாக விளக்கலாம்.

**மாற்றரும் சிறப்பின் மரபியல் கிளப்பின்
பார்ப்பும் பறழும் குட்டியும் குறுளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் என்று
ஒன்பதும் குழவியொடு இளமைப் பெயரே!**

(தமிழண்ணல், தொல்காப்பியம்.மரபியல் - 1, பக். 357)

இளமைப் பெயர்களின் பொருண்ருமைக்களம்



இளமைப் பெயர்கள்					
இறைச்சி உண்பன			தாவரங்கள் உண்பன		
வீட்டு விலங்கு	காட்டு விலங்கு		வீட்டு விலங்கு	காட்டு விலங்கு	
	வலிமையுடையன	வலிமை குறைந்தவை		வலிமையுடையன	வலிமை குறைந்தவை
குருளை - நாய் குட்டி - நாய், பூனை பறழ் - நாய், பூனை பார்ப்பு - பறவை பிள்ளை - பறவை	பிள்ளை - புலி குருளை - புலி குட்டி - புலி பறழ் - புலி	பிள்ளை - பறவை குருளை - கீரி குட்டி - கீரி பறழ் - கீரி பார்ப்பு - பறவை	பிள்ளை - பன்றி, பறவை குருளை - பன்றி குட்டி - பன்றி பார்ப்பு - பறவை மறி - ஆடு , குதிரை கன்று - பசு, எருமை,	குழவி - யானை	பிள்ளை - பன்றி, குரங்கு, பறவை குருளை - அணில் குட்டி - எலி, அணில், குரங்கு பறழ் - அணில், எலி, குரங்கு


			குதிரை, கழுதை குழவு - பசு, எருமை		கன்று - குதிரை, மான், கழுதை, கரடி மறி - ஆடு, குதிரை, மான் குழவி - மான், மகவு, குரங்கு

இளமைப் பெயர்கள் என்று பொதுவாக விளக்கப்பட்டிருப்பினும் அப்பெயர்கள் எவ்வுயிரினத்திற்கு வழங்கப்படுகிறதோ சொற்தொகுதி இறைச்சி உண்பன, தாவரங்கள் உண்பன, இரண்டையும் உண்பன என பிரிந்து நிற்பதை விளக்கமுடிகிறது. அச்சொற்தொகுதி சொற்களைப் பொருண்மைக்களப்படுத்தும் போது அவை மேலும் வீட்டு விலங்கு, காட்டு விலங்கு என்பதோடு வலிமையுடைய வலிமை குறைந்தவை எனவும் பிரிந்து பொருண்மைக்களத்தை உருவாக்கி நிற்பதை இப்பொருண்மைக்களத்தின் வழி விளக்கமுடிகிறது.

ஆண்பால் பெயர்களின் சொற்தொகுதியும் பொருண்மைக்களமும்

எருதும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்
சேவும் சேவலும் இரலையும் கலையும்
மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்
போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்
யாத்த ஆண்பாற் பெயர் என மொழிப

(தொல்காப்பியம்.மரபியல் - 2, பக். 114)





ஆண்பால்					
நீரில் வாழ்வன		நிலத்தில் வாழ்வன		பறப்பன	வலிமையுடைய விலங்குகளின் பொதுப்பெயர்
மீன் வகை	**விலங்கு வகை**	**இறைச்சி உண்பன**	**தாவரங்கள் உண்பன**	மயில் வல்லூறு	ஏற்றை- வலிமையுடைய விலங்குகளின் பொதுப்பெயர்
சுறா	முதலை	புலி	பன்றி யானை மான்கள் எருமை காளை ஆடு		

பெண்பால் பெயர்களின் சொற்தொகுதியும் பொருண்மைக்களமும்

"பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகும் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தம் சான்ற பிடியோடு பெண்ணே"

(தொல்காப்பியம்.மரபியல் - 3, பக். 114)





பெண்பால்			
நீரில் வாழ்வன	**நிலத்தில் வாழ்வன**		**பறப்பன**
நத்தை	**இறைச்சி உண்பன**	**தாவரங்கள் உண்பன**	கோழி கூகை மயில்
	நத்தை	மான்கள் யானை குதிரை கழுதை பன்றி எருமை ஆடு நரி குரங்கு	

ஆண்பால் பெண்பால் பெயர்களை சொற்தொகுதியாக தொகுத்து நிறுவும்போது அச்சொற்கள் நிலத்தில் வாழ்வன, நீரில் வாழ்வன, பறப்பன, வலிமையுடை விலங்குகளின் பொதுப்பெயர் பிரிந்து நிற்பதை காணமுடிகிறது. மேலும் சொற்தொகுதியில் நிறுவியப் பெயர்களைப் பொருண்மைக்களம் படுத்தும்போது அச்சொற்கள் நீர்வாழ்வன, மீன் வகை, விலங்கு வகை எனவும், நிலத்தில் வாழ்வன, இறைச்சி உண்பன, தாவரங்கள் உண்பன எனவும் பிரிந்து நிற்பதை பொருண்மைக்களம் வழி விளக்கமுடிகிறது.

மரபியலில் பொருண்மைக்களத்தை விளக்கி நிற்கும் நூற்பாக்கள்

மரபியலில் மேலும் விளக்கப்பட்டுள்ள,
ஒன்றுஅறி வதுவே உற்றுஅறி வதுவே
இரண்டுஅறி வதுவே அதனோடு நாவே
மூன்றுஅறி வதுவே அவற்றோடு மூக்கே
நான்குஅறி வதுவே அவற்றோடு கண்ணே
ஐந்துஅறி வதுவே அவற்றோடு செவியே
ஆறுஅறி வதுவே அவற்றோடு மனமே

(தொல்காப்பியம்.மரபியல் - 1, பக். 357)

என்ற உயிரினப்பாகுபாடு நூற்பாவும்,

தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லோடு வரும்எனச் சொல்லினர் புலவர்

(தொல்காப்பியம்.மரபியல் - 1, பக். 357)

என்ற புல்லின் உறுப்புக்களை விளக்கும் நூற்பாவும்,

இலை முறியே தளிரே தோடே
சினையே குழையே பூவே அரும்பே
நனையே உள் உறுத்து அனையவை எல்லாம்
மரனொடு வருஉம் கிளவி என்ப.

(தொல்காப்பியம்.மரபியல் - 1, பக். 357)

காயே பழமே தோலே செதிளே
வீழோடு என்றாங்கு அவையும் அன்ன

(தொல்காப்பியம்.மரபியல் - 1, பக். 357)

என்ற மரத்தின் உறுப்புக்களை விளக்கும் நூற்பாவும், புல், மரம் இரண்டிற்கும் பொதுவான நூற்பாவும், நூல் வகைப்பாடுகள் போன்றவற்றையும் பொருண்மையியல் ஆய்விற்கு உட்படுத்தலாம். அவ்வுட்படுதலில் அச்சொற்கள் சொற்தொகுதியாகவும், பொருண்மைக் களமாகவும் பிரிவுபடாமல் பொருள் உட்கோடல், பொருண்மை அடுக்குறவு என விளக்கி நிற்கின்றன.

இவ்வாறு இளமைப்பெயர்கள், ஆண்பால் பெயர்கள், பெண்பால் பெயர்களை மேலும் ஒருபொருட்பன்மொழி, பல்பொருண்மை எனவும் பகுத்து பொருண்மையியல் ஆய்விற்கு உட்படுத்தலாம்.

முடிவுரை

தொல்காப்பியத்தின் கருத்துக்கள் பொருண்மையியல் கூறுகளை நிரம்ப பெற்றுள்ளதைப் பொருண்மையியல் ஆய்விற்கு உட்படுத்துவதன்வழி அறியமுடிகிறது. அவற்றில் தொல்காப்பியர் பொதுப்பண்பில் விளக்கிய மரபியல் தொடக்க நூற்பா முதல் முடிவு நூற்பா வரை உள்ள கருத்துக்கள் பொருண்மையியலின் அனைத்துக் கூறுகளுக்குமான உள்ளடக்கத்தைக் கொண்டு அமைந்துள்ளதை இவ்வாய்வு விளக்க முற்பட்டுள்ளது. இவ்வகையான ஆய்வுகள் மரபிலக்கணத்தைப் பிறத் துறைகளோடு ஒப்பிட்டு அல்லது உட்படுத்தி விளக்குவதுடன், பிற துறைகளின் விளக்கத்திற்கும் ஏற்று அமைந்துள்ளதை விளக்க வழிவகுக்கிறது.

துணைநூற்பட்டியல்

1. கி, அரங்கன். *மாற்றிலக்கண மொழியியல்*. சென்னை, தமிழ் நூலகம், 1975.
2. கோ, கார்த்திகேயன். *களப்பொருண்மையியல் ஆய்வு மற்றும் உடல்நலப் பொருண்மைக் களம்*. தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சை, ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடு, 2010.
3. கி, கருணாகரன், ஜெயா.வ. *மொழியியல்*. சென்னை, முதற்பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2010.
4. செ, சண்முகம். *பொருண்மையியல்*. அண்ணாமலை நகர், முதற்பதிப்பு, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், 1996.
5. மு, சுதா. *தொல்காப்பியத்தில் பயணங்களும் பதிவுகளும்*. தொகுதி 2, இதழ் 2, சனவரி, தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், பக்.4, 2020. DOI: 10.5281/zenodo.36288434, E-ISSN: 2581-7140
6. *தொல்காப்பியம்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 1981.
7. அ, நடராஜன். *பட்டினபாலை பொருண்மைக்களமும் சொல்லமைப்பும்*. கோயம்புத்தூர், முனைவர் பட்ட ஆய்வேடு, பாரதியார் பல்கலைக்கழகம்,
8. ஆ கோ, நடராசன். *மொழியியல் வரலாறு*. அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்வி இயக்ககம், 1999.
9. ரா, பிரபா. *உளவியல் சார்ந்த உறவில் தொல்காப்பியத் தோழி*. சர்வதேச தமிழ் ஆய்விதழ், தொகுதி 4, இதழ் 18, 2022.
10. நா, மகாலிங்கம். *தொல்காப்பியம் எழுத்துப்படலம் சொல்படலம்*. சென்னை, இராமலிங்கர் பணிமன்றம், 1994.
11. நா, மாணிக்கவாசகன். *தொல்காப்பியம் மூலமும் உரையும்*. சென்னை, உமா பதிப்பகம், 2000

REFERENCES

1. K, Arangan. *Matrilakkana Mozhiyiyal*. Tamil Noolagam, Chennai, 1975.
2. G, Karthikeyan. *Kalaporumaiyial Ayvu matrum Udalnala Porunmaikkalam*. Tamil University, Thanjai, Ayviyal Niraingar Ayvedu, 2010.
3. K, Karunakaran. Jaya.Va. *Mozhiyiyal*. Chennai, Vol 1, New Century Book House (P) Ltd., 2010.
4. S, Shanmugam. *Porunmaiyiyal*. Annamalai Nagar, Vol 1, Anaithinthiya Mozhiyiyal Kazhagam, 1975.
5. M, Sudha. *Tholkappiyathil Payanagalum Pathivukalum*. Vol 2, Iss 2, January, Tamil Mozhi Matrum Ilakkia pannattu Aayvithazh, Pg.no 4, 2020. DOI: 10.5281/zenodo.36288434 E-ISSN: 2581-7140
6. *Tholkappiyam*. Chennai, New Century Book House (P) Ltd., 1981.
7. A, Natarajan. *Pattinapalai Porunmai Kalamum Sollamaippum*. Coimbatore, Doctoral Reseacher, Bharathiar University, 2015.
8. A G, Natarajan. *Mozhiyiyal Varalaru*. Annamalai Nagar, Anaithinthiya Mozhiyiyal Kazhagam, 1999.
9. R, Prabha. *Ulaviyal Sarntha Uravil Tholkappiya Thozhi*. International Research Journal of Tamil, Vol 4, Iss 18, 2022.
10. N, Makalikam. *Tholkappiyam Ezhuthupadalam Solpadalam*. Chennai, Ramalingar Panimantram, 1994.
11. N, Manikkavasakan. *Tholkappiyam Moolamum Uraiyum*. Chennai, Uma Publications, 2000.